# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2024

ஆண்டு: 5 திகதி: 23.11.2024

நேரம்: 02:00 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி செல்வநாயகி சிவசுப்பிரமணியம்
உதவி ஆசிரியர்: திருமதி உமா ஆதீஸ்வரன்

மாணவர் பெயர்: _____

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 20 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**கதையை வாசித்த பின்பு, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

**ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த அதியமான்**

கொடை கொடுப்பதில் சிறந்தவன் மன்னன் அதியமான். இவன் தகடூர் என்னுமிடத்தை ஆட்சி செய்தான். இவனிடம் எவர் வந்தாலும் இல்லையென்று சொல்லாது அவர்களுக்குக் கொடை அளிப்பான். தன்னிடம் வரும் புலவர்களை அன்புடன் உபசரித்து அவர்களுடன் நெடுநேரம் இருந்து இனிமையாகப் பேசுவான்.

ஒரு முறை அதியமானுக்குப் பெறுதற்கரிய ஒரு நெல்லிக்கனி கிடைத்தது. அதனை உண்பவர் மரணம் இன்றி நெடுங்காலம் உயிர் வாழலாம். இவ்விதம் கிடைத்த நெல்லிக் கனியை அதியமான் உண்ணவில்லை. அவ்வேளையில் அவனின் அரச சபைக்கு நெடுந்தூரத்திலிருந்து ஔவையார் நடந்து வந்து சேர்ந்தார். அப்போது களைப்போடிருந்த ஔவைப் பாட்டிக்கு அதியமான் அந் நெல்லிக் கனியைக் கொடுத்தான். தான் உண்பதைவிட நீண்ட காலம் மரணம் இன்றித் தமிழுக்குத் தொண்டு செய்யும் ஔவைப் பாட்டிக்கு இதனைக் கொடுப்பதே சிறந்தது என மன்னன் எண்ணினான். இச் செயல் அதியமானின் கொடைச் சிறப்பை உணர்த்தி நிற்கிறது.

**"நெல்லிக் கனியைத் தின்றுலகில்**
**நீடு வாழ்ந்த தமிழ்க் கிழவி" - ஔவையார்**

1.1 ஆதியமானிடம் இருந்த சிறப்பு என்ன?

1.2 அதியமான் நெல்லிக்கனியை ஔவையாருக்கு கொடுக்க ஏன் எண்ணினான்?

1.3 அதியமானின் இச்செயல் அவனது எச்சிறப்பை வெளிப்படுத்துகின்றது?

1.4 அதியமானுக்குக் கிடைத்த நெல்லிக்கனி எத்தன்மை கொண்டது?

1.5 நீடு வாழ்ந்த தமிழ்க்கிழவி யார்?

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

2.1 **இலக்கத்துக்குரிய சொல்லை எழுதி வாக்கியத்தைப் பூர்த்தி செய்யுங்கள். (4 புள்ளிகள்)**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. பூனை | 2. பருந்து | 3. நன்றி | 4. வானத்தில் | 5. மிருகம் |
| 6. பிடிக்கும் | 7. பால் | 8. எலி | 9. நாய் | 10. பசுவின் |
| 11. வட்டமிட்டுப் | 12. உள்ள | 13. மிக்கது | 14. பறந்தது | 15. சுவை |

அ.

| | | |
|---|---|---|
| 1. | 8. | 6. |

ஆ

| | | | |
|---|---|---|---|
| 9. | 3. | 12. | 5. |

இ

| | | | |
|---|---|---|---|
| 2. | 4. | 11. | 4. |

ஈ

| | | | |
|---|---|---|---|
| 10. | 7. | 15. | 13. |

2.2 **கீழே தரப்பட்டுள்ள வரி வடிவங்களில் விடப்பட்ட எழுத்துக்களை ஒழுங்குபட நிரப்புங்கள். (6 புள்ளிகள்)**

அ.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | | | கு | | | | கை | கொ | கோ | |

ஆ.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம | | | | மு | | | | மை | | | மௌ |

இ.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| த | | | | து | | | | தை | | | தௌ |

ஈ.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச | | | | சு | | | | ைச | | | செள |

| வினா இல | 3 | புள்ளிகள் | 20 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**3.1 சரியான சொல்லைக் கொண்டு நிரப்புங்கள். (10 புள்ளிகள்)**

அ. (கரி, கறி)

பூமியினுள் சுரங்கத்தில் கிடைப்பது ----------

சுவையான உணவாய் அமைவது ----------

ஆ. (கறை, கரை)

ஆற்றின் அல்லது கடலின் ஓரம் ----------

ஆடையில் படிவது ----------

இ. (வாள், வால்)

குதிரைக்கு இருப்பது ----------

வீரனிடம் இருப்பது ----------

ஈ. (புளி, புலி)

காட்டில் வாழ்வது ----------

மரத்தில் இருந்து பெறுவது ----------

உ. (ஒளி, ஒலி)

காதால் கேட்பது ----------

கண்ணால் காண்பது ----------

3.2 கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள் (10 புள்ளிகள்)

| | இறந்த காலம் (past tense) | நிகழ்காலம் (Present tense) | எதிர்காலம் (Future tense) |
|---|---|---|---|
| 1 | | வருகிறான் | |
| 2 | சென்றான் | | |
| 3 | | | குடிப்பான் |
| 4 | ஓடியது | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 5 | | குரைக்கிறது | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **4** | **புள்ளிகள்** | **15** | **பக்கம்** | **6** |

4.1 ஒத்த பொருள் தரும் சொல் தாருங்கள். (5 புள்ளிகள்)

| | |
|---|---|
| வண்ணம் | |
| பூக்கள் | |
| மகிழ்ச்சி | |
| தோழன் | |
| எழில் | |

4.2 பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வாக்கியம் அமையுங்கள். (10 புள்ளிகள்)

| | |
|---|---|
| வலி | |
| வளி | |
| வழி | |
| வால் | |
| வாழ் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **5** | **புள்ளிகள்** | **15** | **பக்கம்** | **6** |

உமது பிறந்த நாள் விழாவில் வந்து கலந்து கொள்ளுமாறு உமது நண்பர் ஒருவருக்கு கடிதம் எழுதுங்கள். (பிறந்த நாள், எப்போது, எங்கே, நேரம் முதலியவற்றைக் குறிப்பிடுக)

_____

_____

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **6** | **புள்ளிகள்** | **20** | **பக்கம்** | **7** |

பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து, 15 வசனங்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுங்கள்.

6.1 விளையாட்டுகள்:

**(உதவிச் சொற்கள் - பெறும் நன்மைகள், தெரிந்த விளையாட்டுகள், மகிழ்ச்சி, உடல் உறுதி, பயன்கள், மன அமைதி, போட்டிகள்)**

6.2 தமிழர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்று.

தைப்பொங்கல், தீபாவளி, புது வருடப்பிறப்பு

## 6.3 இயற்கை அழிவுகள் (Natural Disasters)